செ.வெ.எண் 19 நாள்:19.06.2020

## பெரம்பலூர் மாவட்டம்

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சிறப்பு திட்டமான குடிமராமத்து திட்டத்தின் கீழ் பெரம்பலூர் மாவட்டத்தில் நடைபெறும் குடிமராமத்து திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சியர் திருமதி.வே.சாந்தா இ.ஆ.ப. அவர்கள் ஆய்வு.

**அதன் விவரம் வருமாறு:**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்களின் சிறப்பு திட்டமான குடிமராமத்து திட்டம் **2020-21-ம்** ஆண்டிற்கான பணிகள் திட்டத்தின் கீழ் பெரம்பலூர் மாவட்டத்தில் நடைபெறும் குடிமராமத்து திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி வே.சாந்தா, இ.ஆ.ப.,** அவர்கள் **இன்று (19.06.2020)** ஆய்வு செய்தார். இன்று வேப்பந்தட்டை வட்டம் அன்னமங்கலம் ஏரியில் நடைபெறும் பணிகள், பெரம்பலூர் வட்டம் மருதையாறு அணைக்கட்டு மற்றும் துறைமங்கலம் பெரிய ஏரியின் வரத்து வாய்க்கால் தூர்வாரும் பணிகள் மற்றும் செங்குணம் ஏரியில் நடைபெறும் குடிமராமத்து திட்ட பணிகளை மாவட்ட ஆட்சியர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். அதுசமயம் பாசன சங்க நிர்வாகிகள் மற்றும் பொதுப்பணித்துறை அதிகாரிகளிடம் ஏரிகளில் ஆக்கிரமிப்பு ஏற்படுவதை தடுக்கும் வகையில் எல்லை கற்கள் நடுவதற்கும், ஏரிகளில் உள்ள சீமை கருவேலிகளை அகற்றும்படியும் அறிவுறுத்தினார்கள். மேலும், பாசனதாரர்கள் குடிமராமத்து பணிகளில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திகொண்டு நல்லமுறையில், விரைந்து பருவமழை காலம் தொடங்குவதற்கு முன் பணிகளை முடிக்குமாறு அறிவுறுத்தினார்கள். மேலும் பாசனதாரர் சங்கத்தினரால் செய்து முடிக்கப்பட்ட குடிமராமத்து பணிகளுக்கு உண்டான தொகையினை உடனுக்குடன் வழங்கிடுமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்கள்.

**ஆய்வுக்குப்பின் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:-**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்களின் உத்தரவின்படி, பெரம்பலூர் மாவட்டத்தில் குடிமராமத்து திட்டத்தின் கீழ் ஏரிகளில் சீரமைக்கும் பணிகள் விவசாயிகளின் பங்களிப்புடன் கடந்த மூன்று ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. தமிழகத்தில் விவசாயிகளின் நலன் கருதி விவசாயிகளுக்கான பல்வேறு நலத்திட்டங்கள் அறிவிக்கப்பட்டு, அவர்கள் வாழ்வாதாரத்தினை மேம்படுத்திடவும், அவர்கள் வாழ்க்கை தரத்தை உயர்த்திடும் வகையில், திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் தமிழகத்தில் நீர் வள ஆதாரங்களை மேலாண்மை செய்திடவும், நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்திடவும், தமிழக அரசால் தமிழகம் முழுவதும் பல்வேறு நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி, பயனீட்டாளர்கள் பங்களிப்புடன் நீர் நிலைகளை புனரமைக்கும் பண்டைய குடிமராமத்து திட்டத்திற்கு புத்துயிர் அளிக்க, தமிழக அரசு சார்பில் உத்தரவிடப்பட்டு, அதன்படி **கடந்த 3 ஆண்டுகளும்,** அதனை தொடர்ந்து நடப்பாண்டும் தமிழகம் முழுவதும் இப்பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சிறப்பு திட்டமான குடிமராமத்து திட்டத்தின் கீழ் கடந்த 2019-20-ம் ஆண்டில் ரூ.3.48 கோடி மதிப்பீட்டில் 14 பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இதனால் 2701.46 ஏக்கர் விவசாய நிலங்கள் பயன் அடைந்துள்ளன. மேலும் நிலத்தடி நீர்மட்டமும் உயர்ந்துள்ளது.

இவ்வாண்டு தமிழ்நாடு முழுவதும் குடிமராமத்து திட்டப்பணிகளுக்காக 1829 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, இந்த திட்டப் பணிகளுக்காக ரூ.499.75 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் பெரம்பலூர் மாவட்டத்தில் நீர்வள ஆதாரத்துறையின் மூலமாக 14 பணிகள் மேற்கொள்ள ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதற்காக ரூ.3.58 கோடி மதிப்பீட்டில் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் 10% விவசாயிகளின் பங்களிப்பு அதாவது உடல் உழைப்பு / பொருட்களின் விலை அளித்தல் / சங்கத்திலிருந்து தொகையாக வழங்குதல் என்றும், மீதமுள்ள 90% அரசின் பங்களிப்பாக வழங்கப்படும். இப்பணிகள் அனைத்தும் பாசனதாரர்கள் சங்கத்தின் மூலம் மேற்கொள்ளப்படும். நடப்பாண்டில் இத்திட்டத்தின் கீழ் மருதையாறு அணைக்கட்டு ரூ. 20 இலட்சத்திலும், பேரையூர் ஏரி ரூ.29 இலட்சத்திலும், அய்யலூர் ஏரி ரூ.22 லட்சத்தில், குரும்பலூர் அணைக்கட்டு ரூ.25 இலட்சத்திலும், தழுதாழை பெரிய அணைக்கட்டு ரூ.30 இலட்சத்திலும், களரம்பட்டி ஏரி ரூ.20 இலட்சத்திலும், வடக்கலூர் ஏரி ரூ.30 இலட்சத்திலும், லாடபுரம் சிறிய ஏரி ரூ.30 இலட்சத்திலும், அன்னமங்கலம் ஏரி ரூ.25 இலட்சத்திலும், திருவாளந்துறை ஏரி ரூ.22 இலட்சத்திலும், கீரவாடி ஏரி ரூ.25 இலட்சத்திலும், செங்குணம் ஏரி ரூ.26 இலட்சத்திலும், பெரம்பலூர் மேல ஏரி ரூ.25 இலட்சத்திலும், கீழப்புலியூர் ஏரி ரூ.29 இலட்சம் மதிப்பில் என மொத்தம் ரூ.358 இலட்சங்கள் மதிப்பீட்டில் 14 பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

இப்பணிகள் மேற்கொள்வதன் மூலம் நீர் வீணாகாமல் முழுக் கொள்ளளவு 189.74 மில்லியன் கனஅடி நீர் தேக்குவதுடன் மூலம் 1207.13 ஹெக்டேர் நிலங்கள் நேரடி பாசன வசதி பெறுகிறது, மேலும் நிலத்தடி நீர்மட்டம் உயர்வதன் மூலம் குடிநீர் வசதி பெறுவதுடன் பொதுமக்களின் வாழ்வாதாரம் மேம்பட வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. பெரம்பலூர் மாவட்டத்தில் பொது மக்களின் குடிநீர் தேவையை நிவர்த்தி செய்வதற்கும், நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்துவதற்கும் மற்றும் நீர் ஆதாரங்களை மேம்படுத்துவதற்கும், விவசாயிகளின் பங்களிப்புடன் குடிமராமத்து திட்டத்தின்கீழ் நடைபெற்று வரும் பணிகளுக்கு விவசாயிகள் முழு ஒத்துழைப்பு அளித்து பயன்பெறலாம்.

இவ்வாறு தெரிவித்தார்.

இவ்வாய்வின்போது செயற்பொறியாளர் (பொபது/நீஆது) திரு.தட்சணாமூர்த்தி, மருதையாறு வடிநில கோட்டம், உதவிப்பொறியாளர்கள் திரு.சித்தார்த்தன், திரு.நல்லுசாமி, ஊராட்சி மன்ற தலைவர் திருமதி. சந்திராகண்ணுசாமி மற்றும் பாசன சங்க நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், பெரம்பலூர்.**